REGD No. M. 4642

திராவிடநாடு

இலங்கை 15 சதம் | விலை அணா 2

மலர் 9 | 22—4—51 | இதழ் 44

அரசியல் கற்பனை

மருமகள் மாமியாராகிவிட்டாள்!

[தில்லை - வில்லாளன்]

வள்ளியம்மாள் மாமியாராகிவிட்டாள்—ஆனால், அவளே வெள்ளையம்மாளிடம் மருமகளாக இருந்தவள்தான்!

மருமகள், மாமியாராவது சகஜம், ஆனால், மருமகளாக இருந்தபொழுது நடந்தவைகளை மறந்துவிட்டு, மாமியாரானவுடன் நடப்பது விசித்திரம்!

வள்ளியம்மாள், இன்று மாமியார், நேற்று மருமகள்!

அதுவும், கணவனின் சிற்றன்னையின் கொடுமையில் வெந்த தங்கமாக இருந்தவள்: ஆகவே மாமிக் கொடுமையின் முழு வலிமையும் உணர்ந்தவள்,

அவளுக்கு இன்று மாமிப்பட்டம் கிடைத்துவிட்டது. திலகம், அவளது மருமகள்!

அடங்கியிருந்தவளுக்கு, அதிகாரம் கிடைத்தவுடன், ஆடிப் பார்ப்பது, இயற்கை சுபாவம் போலும்! இல்லாவிட்டால் வள்ளியம்மாள் அப்படி நடிக்கமாட்டாள் — பேசமாட்டாள்!

திலகத்தை அவள் சித்திரவதை செய்து வருகிறாள். ஊராரே, இதனைக் கண்டு கண்ணீர் வடிக்கின்றனர்.

பேசக்கூடாது

எழுதக்கூடாது

கூட்டம் கூடாது

வெளியில் போகவே கூடாது

இப்படிக் 'கூடாது' என்று கூறாதது எதுவுமில்லை. திலகம், எதைச் செய்தாலும், அதில் குறைகாணாதிருப்பதில்லை குற்றம் சொல்லாமல அவள் வாய் ஓய்வதில்லை. அது கூடாது, இது அடாது என்று காலையில் எழுந்தது முதல், இரவு படுக்கும் வரை, கூறாத நேரமில்லை.

பேச, எழுத, கூட்டம்கூட, வெளியில் நடக்க......கூடாது, கூடாது, என்று அடுக்கிக் கொண்டேபோகும் பொழுது மலைப்பு தென்படுகிறது. திலகம் என்ன, பெரிய பிரசங்கியா, பொது காரியமாற்றுபவளா என்று எண்ணி வியப்படையவேண்டாம்.

ஊர்ஜனங்களைக் கூட்டி, வேண்டாத வம்புகள் பேசக்கூடாது என்று மாமி, மருமகளைக் கண்டிக்கலாம் — உரிமை உண்டு. அதனால் பெருமையும் உண்டு! அப்படி எதும் திலகம் செய்துவிடவில்லை.

கணவனோடு, அவள் பேசுவது குற்றமாம்-'என்னடி இது, கூச்சநாச்சமில்லாமல் பெரியவங்க, சின்னவங்க இருக்கிறாங்களான்னு கூடப் பார்க்காமே, அவனோடு என்னடி பேச்சு வேண்டிக்கிடக்கு உனக்கு—குசு குசுன்னு பொழுதண்ணைக்கும் புருஷனோடு பேசிகிட்டிருந்தால் எல்லாம் ஆயிடுமா" என்று வள்ளியம்மாள் கேட்பாள். அது மட்டுமா, திலகத்தை, இனி கணவனுடன், அவள் எதிரில் பேசவேகூடாது என்று கூறிவிட்டாள்.

திலகம், கணவனுக்கு கடிதம் எழுதுவதுகூடத் தவறாம் — ஒரு நாள், அவள் கணவனுக்கு எழுதியிருந்த கடிதத்தைப் பிடுங்கிப் படித்துவிட்டுத் திட்டினாள். 'எல்லாம் விஷம்—துவேஷம் கிளப்பி, குடும்ப ஒற்றுமையைக் குலைப்பதாக இருக்கிறது' என்று கூறிவிட்டு அதனை கிழித்து எறிந்துவிட்டாள்.

திலகம், துடுக்குக்காரப் பெண்ணாக இல்லாவிட்டாலும்—எவ்வளவுதான் பொறுக்க முடியும்! ஆத்திரமும், கேலியும் கலந்த குரலில் 'கோலங்கூடப் போடக்கூடாதோ?" என்றாள். வள்ளியம்மாள் திகைத்துவிட்டாள்.

அக்கம் பக்கத்துப் பெண்கள் நாலைந்து பேருடன் சேர்ந்திருந்து

விட்டால் போதும். உடனே கிடு கிடுவென்று பேசுவாள். அதற்கும் தடையுத்தரவு—இனிக் கூட்டம் கூடாது இங்கு என்று கத்துவாள்.

அழகு கூடாது — கணவன் மயங்கிவிடுவானும்! அலங்காரம் தேவையில்லை—கொண்டவனை மண்டியிடச் செய்து விடுமாம்!

திலகம், எப்படி அலங்காரமின்றியிருந்தாலும், அவள் கணவன் அவளைச் சுற்றித் திரிகிறான். அவள் எதைச் சொன்னாலும் அதுவே இனிக்கிறது என்று கொஞ்சுகிறான். அது அவள் குற்றமா? இவளது மகன்தானே, அவன்! அடக்கிக் கொள்ளட்டுமே!

வெளியில் நடக்கவே கூடாது! நாடகம், சினிமா பார்க்கக்கூடாது! இசை, நாட்டியம் எதுவும் கூடாது! இப்படிக் கண்டபடிப் பேசிடுகிறாள்.

திலகம் படித்த பெண் மட்டுமல்ல, அருங்குணவதி என்று ஊரார் கூறுகிறார்கள். இல்லாவிட்டால், இவ்வளவு அடக்குமுறைகளையும் தாங்கிக் கொண்டு மாமியாரை மதிப்புடன் நடத்துவாளா?

மருமகள் படித்தவளாயிற்றே என்று பெருமைப்பட வேண்டிய மாமி, படித்ததே ஒரு குற்றம் என்று பேசுகிறாள்-என்ன விந்தை!

வள்ளியம்மாள், இப்படி அடக்குமுறைகளை வீசியபடியே இருந்தாள். குடும்பத்தில் குமுறலையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்திய வண்ணமிருந்தாள்.

மகனிடம், மருமகளைப் பற்றிக் கூறாத அவதூறு இல்லை. தாய், மகனிடம் பேசக்கூடாத செய்திகளையெல்லாம் கூடப் பேசித் தீர்த்து விட்டாள்.

மகன் இல்லாத சமயத்தில், மருமகளை அடிக்கவும், உதைக்கவும தவறுவதில்லை. இரத்தகாயம் ஏற்படுத்திக்கூட விட்டாள்.

ஊர் முழுவதும், 'நாற்ற'த் தமிழில், தன் மருமகளைத் தூற்றி வந்தாள்!

தன் மகனைக் கெடுத்துவிட்டாளாம். கொஞ்சிப் பேசி, மாசற்ற மகனை, மாதாவையே எதிர்க்கச் செய்துவிட்டாளாம். எவ்வளவோ, பக்திமானாக இருந்தவனை நாஸ்திகனாக்கி விட்டாளாம் - கோயில் குளம் தவறாது சென்றவனை, இன்று தன்னைச் சுற்றி வரும்படி செய்துவிட்டாளாம்.

பரம்பரைப் பெருமை பாழாகும் வகையில் சாதி, மதாச்சாரங்களைக் கெடுத்து விட்டாளாம்.

தாயைக்கூட, சண்டிக்கவும், ஏவி விட்டுவிட்டாளாம்.

இப்படி ஏதேதோ கூறி, திலகத்தை திட்டாத நேரமில்லை—தூற்றாத இடமில்லை.

வள்ளியம்மாள் ஒரு உண்மையை மறந்துவிடுகிறாள். தேனப்பன், திலகத்தின் கணவன் மட்டுமல்ல, வள்ளியம்மாளின் மகனுங்கூட! இவள் ஏன் அவன் தவறுகளை எடுத்துக் காட்டித் திருத்தக்கூடாது! உண்மையிருந்தால் கேட்காமல் போகமாட்டான். அப்படியிருந்தால், அதுவும், தாயின் குற்றம்தான். அவள்தான், அந்த மகனை அப்படி வளர்த்துவிட்டாள்!

அதைச் செய்யாமல், வந்த பெண்ணை வாயுக்கு வந்தபடித் தூற்றுவதால் இலாபம், இவளது கையாலாகாதத்தனம் ஊருக்குத் தெரிவதுதான்!

வாய் கிழியக் கத்துகிற வள்ளியம்மாள், அப்படிபொன்றும் குடும்பத்தை, 'குபேரபுரி'யாக்கி வைத்துவிடவில்லை. 'குட்டிச்சுவர்' போலவே வைத்திருந்தாள். அவள் மகன், தடித்தனமாகத் திரிந்து வருபவனல்ல. சம்பாதிக்கும் தொகையத்தனையும் இவளிடம் கொடுத்தும், கண்டபடி செலவு செய்து விட்டு, குடிக்க ஒரு கலயமும், படுக்க ஒரு பாயுமில்லாத நிலையில்தான் வீட்டை வைத்திருந்தாள்.

இந்த வள்ளியம்மாள்தான், திலகத்தைத் திட்டுகிறாள்.

வள்ளியம்மாள் மீதும் குற்றமில்லை — அது மனித சுபாவம்! ஏனெனில் தான் பட்ட அவதிகளை பிறர் படும்படிச் செய்து பார்ப்பதில் ஏதோ ஒரு இனிப்பு இருக்கிறது போல ஒரு பிரமை—இது யாருக்கும் வருவதுதான்.

காலை முதல் மேஸ்திரியின், கொடுமையினால் தவிக்கும் சிற்றாள் சிங்காரம், வீடு சென்றதும், மனைவி மருதாயியை மேஸ்திரி திட்டுவது போலத் திட்டி, தான் அடங்கியொடுங்கியதுபோல அவள் அடங்குவதைப் பார்ப்பதிலே ஒரு திருப்தி காண்கிறான்.

அதுபோலத்தான், வெள்ளையம்மாள் படுத்திய கொடுமைகளையெல்லாம் தாங்கிக்கொண்ட வள்ளியம்மாள், இன்று தான் வெள்ளையம்மாளாகிறாள்—திலகத்தை வள்ளியம்மாளாகச் செய்கிறாள்.

வெள்ளையம்மாள் செய்த கொடுமைகளை, ஊர் முழுவதும் கூறி வந்தாள் வள்ளியம்மாள் முன்பு!

கணவனோடு பேசக் கூடாது என்று கூறியபொழுது; நாக்கறுப்பு செய்கிறாள் என்று கூறினாள். குமுறினாள்.

கணவனுக்குக் கடிதம் எழுதக் கூடாது என்று கூறியபொழுது, அவள் எழுத்தைக் கண்டு மிரள்வதாகக் கூறி திருப்திப்பட்டாள்.

வெள்ளைக் கோக்கு பறக்குதடி என்று ஒருநாள் பாடியபொழுது, தன்னைப்பற்றிப் பாடுவதாகச் சொல்லி, இனி இப்பாடலை பாடினால், வாயில் சூடு போடுவேன் என்று வெள்ளையம்மாள் கூவியதை ஆயிரம் பேருக்குச் சொல்லியிருப்பாள், பாட்டைக் கண்டு பயப்படுகிறாள் மாமி என்று பறை சாற்றினாள்.

நான்கு பெண்களுடன் கூடியிருப்பதைத் தடுத்தபொழுது எதிர்த்திருக்கிறாள் — அதற்காக அடித்திருக்கிறாள். அந்தக் காயத்தைக் காட்டியே, ஊரார் அனுதாபத்தைப் பெற்றிருக்கிறாள்.

நாடகங்களைப் பார்க்கவும் கூடாது என்று அவள் தடுத்தபொழுது ஊர் கிடுகிடுக்க வைத்து விட்டாள்.

இப்படி, எந்தெந்தக் கொடுமைகளை, இப்பொழுது செய்கிறாளோ, அவைகளையெல்லாம், அவள் மருமகளாக இருந்தபொழுது அனுபவித்தவள்—அவைகளைக் கண்டித்தவள், காரசாரமாகப் பேசி எதிர்த்தவள்!

அது மட்டுமா?! எனக்கு ஒரு மருமகள் வந்தால் இப்படியா நடத்துவேன், அன்போடு ஆர்வத்தோடு அவளை அணைத்தபடியே கிடக்கமாட்டேனா, மகனென்றாலும், மருமகளென்றாலும் என்ன வித்தியாசம்—பார்க்கட்டும், எனக்கு ஒரு நாள் மருமகள் வராமல் போவதில்லை- இந்த வெள்ளையம்மாளை இங்கு குந்திக்கொண்டு என்னைக் கொடுமைபடுத்திக்கொண்டேயிருக்க முடி

யாது—மருமகளை எப்படி நடத்துவது என்பதற்கே நானே இலக்கணமாகப் போகிறேன்' என்று கூறினாள்.

மாமியாரானாள் — எல்லாவற்றையும் மறந்துவிட்டாள். என்ன கூறினாளோ, அதற்கு நேர் விரோதமாக நடந்திடத் தொடங்கினாள்.

திலகத்தை, வாட்டியபடியே இருக்கிறாள்—வாயில் வந்தபடியெல்லாம் திட்டியபடியே இருக்கிறாள்.

மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்! வள்ளியம்மாள், எது செய்தாலும் பரவாயில்லை, திலகம் ஏதாவது செய்துவிட்டால், தங்கம் வீணானது போலத் தாண்டிக் குதிப்பாள்.

ஒரு நாள் சமயலறையில் ஒரு பாத்திரம் உடைந்து விட்டது—வள்ளியம்மாள் இதுபற்றி இராமாயண கதாகாலட்சேபமே நடத்தத் தொடங்கிவிட்டாள், தினமும்!

வள்ளியம்மாள் வயதானவள்—திலகமோ, அறியாத வயதுப் பெண் அவளைப் பற்றி யாரிடம் போய்க் குறை சொல்வது? அவளைக் காட்டிலும் வயதிலும், அனுபவத்திலும் மூத்தவர்களிடம் சொன்னால் அர்த்தம் உண்டு — பலனும் உண்டு! அதை விட்டு விட்டு, கண்ணாமூச்சு ஆடுகிற 'பாவாடைக்காரி'களையெல்லாம் அழைத்து வைத்துக்கொண்டு, திலகம் இப்படிப் பண்ணினாள், அப்படிப் பண்ணினாள் என்று கூறுவதோடு மட்டுமல்லாமல், அவர்களை விட்டே, திலகத்தைக் கேட்கவும் சொன்னால், என்ன நினைப்பது மாமியாரின் போக்கைப் பற்றி! விசித்திரம் என்று கூறி ஒரு பெருமூச்சு விடுவது தானே!

திலகத்தைத் திட்டுமிடம், அவளைப்போன்றாரிடமோ, அவளைவிடக் குறைந்த நிலையிலுள்ளவரிடமோ இருக்கக் கூடாது—இதனை வள்ளியம்மாள் அறியமாட்டாளா, என்ன! தெரிந்தும் செய்கிற விஷ விளையாட்டு இது!

வள்ளியம்மாளுக்குப் பரிந்து கொண்டு யார் யார் திலகத்தைத் திட்டுவது?

வழியிலே போகும், பிச்சை எடுக்கும் பண்டாரம், நேற்றுக் குடி வந்தவள், உலக 'ஞானமே' இல்லாதது கள் திலகத்தைக் கண்டு பொறாமைபட்டுப் பொங்கிக் கொண்டிருக்கும் ஊரிலே உள்ள 'சின்னது, பெரிசுகள்'........இப்படி இவர்களிடமா, வள்ளியம்மா குறை கூறுவது — அவர்களைக் கேட்கச் சொல்வது! வெட்கம்.

மாமியாரானாலே, முண்டைவீக்கம் வரக் கூடாது — மருமகளும் ஒரு பெண்தான்! அவளுக்கும் மாமியாரின் மனப்பான்மை வர அதிக நாள் பிடிக்காது!

அடங்குகிற வரைதான் அடங்குவாள் பெண்—அதுவும் திலகம் மிகவும் சாந்தமான பெண் — கண்ணியமும், 'கட்டுப்பாடுமே' அவளுக்குரிய அழகான ஆபரணங்கள். அதற்காகவே அவளை அதிக தொல்லை படுத்துவதென்றால் சும்மாயிருந்து விடுவாளா?

மாமியாரானாள், வள்ளியம்மாள்—ஆனால், வள்ளியம்மாளிடம் அவள் பட்ட அவதிகளை மறந்துவிடக் கூடாது—மறந்து விட்டு, கொடுமை செய்யக் கூடாது.

மருமகள், அதிக நாள் அடங்கியிருக்கமாட்டாள்— எதிர்க்கத் தொடங்கிவிடுவாள்.

வள்ளியம்மாள் மாமியார்—ஆனால் திலகமும், தேனப்பனும் உயிருக்குயிராய் வாழும் தம்பதிகள். அதனை அறியாது நடந்தால், மாமியாருக்குத்தான் வேதனை—இதனை அவள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்!

★ மூடுகிறார்கள்! ★

அழுகிப் போய்விட்டன எல்லாம், என்றாலும் தூக்கி வெளியில் எறியக் கூடாது—உள்ளேயே மூடிவை.

X X X

நாற்றமடிக்கிறது — மூக்கு சொல்கிறது, என்றாலும் வாய் திறக்கக் கூடாது. அப்படியே மூடி வைக்க வேண்டும்.

X X X

கெட்ட மணம் அடிக்கிறது என்றாலும், பிறர் கேட்கும்படி அதைப் பேசக் கூடாது. அழுகலைத் தூக்கியெறிந்து அதன் வாடை[illegible] வெளியே துரத்த முயலக் கூடாது.

X X X

நல்ல முதல் போட்டு தொடங்கிய வியாபாரந்தான்—என்ன செய்யலாம்? பழ வியாபாரம், இப்படி அழுகலாகிப் பாழாகப் போகும் என்று யார் கண்டார்கள்.

தொடர்ந்து வியாபாரம் நடக்க வேண்டுமானால், மூக்கைப் பிடித்துக் கொண்டு வாயைத் திறக்காதிருக்க வேண்டியதுதான்!

X X X

பழக்கடை பரமசிவம், பங்குதாரர் கங்காதரனிடம், இப்படிப் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்ட, பழம் வாங்க வந்த பராங்குசம், கூடையை எடுத்துக்கொண்டு, வேறு கனிக்கடை நோக்கி நடந்துவிட்டான், அவன் பரமசிவத்தின் வாடிக்கைக்காரன் என்றாலும், அழுகலை மூடி விற்கும் 'அற்புத' திட்டம் அவனுக்குத் தெரிந்துவிட்டதால்! நஷ்டம் வந்தால் கூடப் பரவாயில்லை, நாணயமிருந்தால் போதும், அழுகலை விட்டெறிந்து விட்டுத்தான், வியாபாரம் செய்யவேண்டும் என்று கங்காதரன் வேறு பேச ஆரம்பித்துவிட்டான், பரமசிவம் என்ன செய்வான்? திகைத்தான், திணறினான்,

* * *

காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் கட்சியோ, காங்கிரஸ் சர்க்காரோ கடைப்பிடிக்கும் திட்டங்களை கண்டிக்கவோ, குறை கூறவோ கூடாது. வேண்டுமானால், கட்சி செயற்குழு கூட்டங்களில் பேசலாம்.

* * *

இப்படி, அ. இ. கா. க. ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது

இதனை பண்டித நேருவும், மற்றும் பலரும் ஆதரித்துள்ளனர்.

பழக்கடை பரமசிவத்தைப் போலவே, அழுகலை, மூடிவைக்கச் சொல்கிறார்கள்.—நாற்றத்தைப்

பொறுத்துக் கொள்ளச் சொல்கிறார்கள்.

அழுகலைப் பற்றி வெளியில் சொன்னால் வியாபாரம் கெடும் என்றான் பழ வியாபாரி—அதுவும், சமீபத்தில் கூடும் சந்தை வியாபாரத்தில் சரக்கு இப்படிப் பாழானது என்று தெரிந்துவிட்டால் என்ன ஆகும் என்ற கவலை கனி வியாபாரி பரமசிவத்திற்கு! அடுத்த தேர்தல் வருகிறது, அதற்குள் இப்படி கண்டபடி, உள் வீக்கத்தை, ஊமைக் காயத்தை விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தால் என்ன செய்வது என்று கேட்கிறார்கள்.

பங்குதாரர் கங்காதரன் 'பாணியிலே' ஆச்சார்யா கிருபளானி இந்தத் தீர்மானத்தை எதிர்த்துவிட்டார்.

மூடு, மூடு என்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள்! திறந்து காட்டுகிறார் கிருபளானி!!

காங்கிரசுக்குள்ளே, ஊழல் மலிந்துவிட்டது, குழப்பம் நிறைந்துவிட்டது. இதனையொட்டியே, காங்கிரஸ் சர்க்காரும் 'குழப்ப ராஜ்ய' மாக்கிவிட்டது, இந்தியாவை! இதனை காங்கிரஸ்காரர்கள் எடுத்துக் கூறவோ, கண்டிக்கவோ கூடாது என்கிறார்கள்.

காங்கிரஸ் காரர்களின் வாயை மூட முயற்சிக்கிறார்கள் — வெற்றி பெறலாம். ஆனால் உள்ளே அடிக்கும் 'நாற்றத்தை' மூடமுடியுமா?

இதைத்தான் ஆச்சார்யா கிருபளானி கேட்கிறார். மூடத்துடிக்கும் தோழர்கள் முகத்தைச் சுளிக்கிறார்கள்—முணுமுணுக்கிறார்கள்.

அழுகலை வைத்துக்கொண்டு, வெளியிலும் போடாமல், உள்ளேயிருக்கும் நல்ல பழங்களையும் காப்பாற்றாமல், வியாபாரத் தந்திரம் பேசுவதுபோல பேசுகிறார்கள். அழுகல், நல்லதையும் அழுகவைத்துவிடும் — இது ஏன் அவர்களுக்குத் தெரியவில்லை.

காங்கிரஸ்காரர்கள்தான் இன்று ஆட்சி புரிகிறார்கள் — மந்திரிகள் அவர்கள், சட்டசபை உறுப்பினர்கள் அவர்கள், மற்ற மற்ற நிர்வாக சக்கரத்தின் எல்லா இடங்களிலும் அவர்கள் இருக்கிறார்கள்.

சட்டசபை உறுப்பினர்கள் காங்கிரஸ்காரர்கள்தான்; என்றாலும் மக்களின் பிரதிநிதிகளாக அல்லவா அங்கே அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் வாயை மூட முனைகிறது கட்சி, அவர்கள் ஊமைகளாகிவிட்டால், மக்கள் விட்டு விடுவார்களா?

நாற்றச் சேற்றை மூடிவைத்துவிட்டு, அதில் நறுமண நர்த்தனம் நடத்தப்பார்க்கிறார்கள். முடியுமா?

கோட்டானை கூவவிட்டு, கழுதையின் குரலையும் சேர்த்துவிட்டு, சங்கீதம் ரசிக்கச் சொல்கிறார்கள். கேட்கப் பொறுக்கவில்லையே என்றால் வாயை மூடச் சொல்கிறார்கள்.

நரகலைக் கொட்டி வைத்து விட்டு, அதனை பன்றி விருந்து நடத்துவதைப் பார்த்துக்கொண்டேயிரு என்கிறார்கள். காணச்சகிக்கவில்லையே என்றால் வாயை மூடு என்கிறார்கள்.

கிருபளானி கூறுகிறார், 'நான் காங்கிரசின் விரோதியாக இருந்தால், இந்த தீர்மானத்தைக்கண்டு மகிழ்ந்திருப்பேன். ஏனெனில் இது, காங்கிரசின் அழிவைக் காட்டுகிறது' என்று!

மானமுள்ள காங்கிரஸ்காரர் இதன்படி நடக்கமாட்டார், நடக்கவும் கூடாது என்கிறார். பிரதமர் நேருவும், காங்கிரஸ் தலைவர் தாண்டனுமே, இதன்படி நடக்க முடியாது என்கிறார். இது உண்மை! மூடக்கூடாத பொருளை மூடினால் என்ன ஆவது?

தீயை, எவனோ ஒரு விசித்திர புத்திக்காரன், திருடவேண்டிய விலையுயர்ந்த பொருள் என்று கூரையிலே ஒளித்துவைத்தானாம்—அதுபோல இவர்கள் ஊழலை மூட, காங்கிரஸ் கட்சிக்காரர்களின் வாயைக் கட்டுகிறார்கள்.

தீயைத் திரையால் மறைக்கிறார்கள்—விளைவு என்னாகும்?

மனித உரிமைகளைக் கூட மதிக்காமல், கட்சிக் கட்டுப்பாடு பெயரால் இப்படி எதேச்சாதிகாரம் செய்கிறார்கள் என்கிறார் கிருபளானி.

உலைவாயை மூடலாம்—
ஊர்வாயை மூட முடியாது

இதனை அவர்கள் உணர்ந்தால், இந்த வீண்முயற்சியிலே இறங்கியிருக்கமாட்டார்கள்.

காங்கிரஸ்காரர்கள் வாயைமூடத் தீர்மானம் தீட்டிவிட்டார்கள் — ஆனால் அத்தீர்மானம், ஏட்டிலே எழுத்துக்களாக இருக்குமே தவிர, நாட்டிலே, எப்படி செயல்களாக மாறும்?

உண்மையில் மூடியிருப்பதானால், எவ்வளவோ செய்திகளை மூடியிருக்கவேண்டும்—மூடவில்லை!

கட்சி
ஆட்சி

இரண்டிலுமே இதுவரை மூடவேண்டியவை எவ்வளவோ வந்துவிட்டன.

அவர்கள் மூடவில்லை—ஆசையில்லாததால் அல்ல—முடியாததால்!

பிரகாசம், மந்திரிகள் மீது பகிரங்கமாக குற்றச்சாட்டுகள் கொண்டுவந்தார். எடுத்து வாய் வலிக்கப் பேசினார். மூடுவதாயிருந்தால் அவர் வாயை மூடியிருக்க வேண்டும் மூடவில்லை.

காமராஜர் — சுப்பையா தேர்தல் காட்சியை மூடியிருக்கவேண்டும் — மூடவில்லை

கேரள மந்திரிசபைக் கோளாறை மறைத்திருக்கவேண்டும் — முடியவில்லை

உத்தர பிரதேசத்தில் காங்கிரசை எதிர்த்தவர்களையெல்லாம் அடங்காப்பிடாரிகள் என்று பட்டம் கொடுக்க முடிந்ததே தவிர வேறொன்றும் செய்யமுடியவில்லை

கிருபளானி வாயை மூடவில்லை தனியமைப்பைத் தடுக்க முடியவில்லை.

அவர்கள் மூடவேண்டுமானால் சட்டசபைகளை மூடவேண்டும் — தீர்மானங்களின்மீது பேசும் முறை உண்டு என்றுள்ள அரசியலமைப்புப் புத்தகத்தையே மூடவேண்டும்.

(9-ம் பக்கம் பார்க்க)

புதிய புத்தகங்கள்

சுப. இளங்கீரன்
எழுதிய அரிய நவீனங்கள்

'பொற்கூண்டு!' 0—6—0
'மீண்டும் வந்தான்' 0—8—0

ரா. தணலன் எழுதியது
'வாத்தியாரம்மா' 0—4—0

கவிஞர் வாணிதாசன் எழுதியது
பழக்கூடை (அச்சில்) 0—6—0

கழிவு 25% செலவு இலவசம்

மின்னல் பதிப்பகம்
(A) புதுச்சேரி (F. I.)

★ பெவின் ★

தந்தையின் முகம் தெரியாது, அவனுக்கு.

தாயோ, நான்காவது வயதிலேயே காலமானாள்.

சின்னஞ் சிறு பருவம். குடியானவக் குழந்தை.

கொஞ்சு மொழி பேசவோ, கோலாகலமாகத் திரியவோ அவனுக்குப் பெற்றோருமில்லை — சொத்து சுகமுமில்லை.

அவன், ஓர் அனாதை.

பன்னிரண்டு வயது— பள்ளிக்குப் போகவேண்டிய பருவம். அவனோ, பயிர்த் தொழில் புரியும் ஒருவருக்குப் பணி புரியலானான்.

சில காசுகள் — வாரச் சம்பளம் அவனுக்கு!

வயது வளர வளர 'உத்யோகமும்' உயர்ந்தது. வயலிலே பணியாள்—பத்து வயது வரை. பிறகு, ஓட்டலிலே வேலை! பதினைந்து வயது தாண்டினான், காரோட்டியானான்!

X X X

"யாரே கதி" என்று, திகைத்துத் திண்டாடிய அக்குடியானவச் சிறுவன், "அவரே கதி!" என்று ஆயிரக் கணக்கானோர் காத்துக்கிடக்குமளவு பெரியவனானான். தவழும் பருவமும், ஆடும் வயதும் உழைப்பிலேயே கழித்த அந்த உத்தமன் தனது 20 வயதிலே தன்னொத்த உழைப்பாளிகளின் துயர் தீர்க்கும் உறுதுணைவன் ஆனான்!

30 வயது—அந்த ஏழை, பலரது இடர் தீர்க்கும் 'தலைவன்' என்று போற்றப்பட்டான். 'தலைவரே வருக! வருக!!' என்று, குக்கிராமத்திலே தாயின் கொஞ்சு மொழியோ தந்தையின் அன்புச் சொல்லோ கேட்டறியாத அவனை, தொழிலாளர்கள் அழைத்தனர். அந்த அன்பழைப்பு, அவன் சாகும்வரை அவனை விட்டு நீங்கவில்லை.

பிறந்தபோது—அவன், அனாதை. சாகும்போது ஒரு சாம்ராஜ்யமே கண்ணீர் சிந்திற்று!

X X X

பெவின் — பிரிட்டிஷ் முன்னாள் வெளிநாட்டு மந்திரி — கடந்த 14ந் தேதி இரவு, தமது 70 வயதில் காலமானார், என்ற செய்தி கேட்டதும், உழைப்பால் உயர்ந்து உழைப்போர்க்குப் பாடுபட்ட, அந்த உத்தமனின் உருவம் நம் எண்ணங்களைக் கசக்கிப் பிழிந்தது.

பிரிட்டிஷ் துறைமுகத் தொழிலாளர்களின் பிதா அவர்.

அவர் பிரிட்டிஷ் சமதர்மக்கட்சியின் தந்தை. தொழிலாளர் உலகின் துயர் துடைக்கும் நிலவு!

கல்வி அறிவு நிரம்பாதவர்தான், அவர். எனினும் சர்ச்சில்பிரபு, தமது மந்திரி சபையில் அவரைத் தொழிலாளர் மந்திரியாக்கினார்.

அதுமுதல் கடந்த மார்ச் 9 வரை அவர் பிரிட்டிஷ் மந்திரிகளுள் ஒருவராகவே பணிபுரிந்து வந்தார்.

அட்லி மந்திரி சபையில், அவர் வெளிநாட்டு மந்திரி ஆனார் என்ற செய்தி கேட்டபோது — உலகமே வியந்தது; 'வெளி உலகைபற்றி விவேகமில்லாதவராயிற்றே' என்ற ஆச்சரியத்தால். ஆனால், அவர் தம் பொறுப்பை சிரத்தையோடு நிறைவேற்றி நன்மதிப்பு பெற்றார்.

அவர், சிறிதுகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார் என்றாலும் மார்பு வலியால் மரணமடைந்தார் என அறிகிறோம். பெவின், தற்போது உயிருடன் உலவும் தொழிற் சங்கத் தலைவர்களில் முக்கிய இடம் வகித்தவர். அவரது மறைவு, தொழிலாளர் உலகுக்கு ஓர் நஷ்டம்.

தன் உழைப்பால், உயர்ந்தார். ஆனால், 'தன்வாழ்வு வளமாயிற்று' என்ற அளவோடு, நின்றாரில்லை.

தன்னைப்போல், தனது சகாக்களாம் தொழிலாளரும் உயரவேண்டுமென பாடுபட்டார்.

அவரது மறைவு கேட்டதும், பிரிட்டிஷ் பிரமுகர் பலர் கண்ணீர் விட்டனராம்!

'கடமை வீரன்' அவர். ஏழைகள் உயர, தன் வாழ்வைப் பலியிட்ட இலட்சிய உருவம் அவருடையது.

அவரது பெயர், ஒரு பொன்சித்திரம்! பிறர் நலன் பேணும் அவருடைய வெற்றி ஒரு 'காவியம்' பொது வாழ்வுடையோருக்கு!

பெவின், காலமானார். ஆனால் அவர் பெயர் என்றும் ஒளிவீசும்!

கொள்கை வீரர்கள்!

டில்லி மந்திரிகளுக்கு கருப்புக் கொடி பிடித்து நமது அதிருப்தியைக் காட்டிக்கொள்ள மேற்கண்ட தேதிகளில், நமது கழக வீரர்களுக்குச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. போலீஸ் கெடுபிடியும், சிறைவாசமும் நமது வீரர்களுக்குப் பரிசாகக் கிடைத்தாலும் கொள்கைக்காகக் குருதி சிந்தும் அம்மறவர் கூட்டம், புன்சிரிப்போடு அவைகளைத் தாங்கி, தங்கள் கடமையைச் செவ்வனே முடித்திருக்கின்றனர்.

ஏப் 7-பிரசாத் வருகையின் போது சென்னை வீரர்கள் கே. எம். கண்ணபிரான், எம். ஆர். பாண்டியன் முதலியோர் கைது. ஐந்து நாள் சிறைவாசம்.

ஏப்-15 கொரடாச்சேரி (தஞ்சை)யில டில்லி மந்திரிக்கு குடந்தை வீரர் S K. சாமி தலைமையில் வெற்றிகரமாக நூற்றுக் கணக்கானோரால் கருப்புக் கொடி காட்டப்பட்டது. குடந்தை பராங்குசம், கபிஸ்தீஸ்வரம் பி. டி. அரசு, ஏ. நடராசன் முதலியோர் தீவிரத் தொண்டாற்றினர். கைது, இல்லை.

ஏப்-16 சென்னையில் டில்லி பிம்பம் கோபாலசாமி (அய்யங்கார்)க்கு கருப்புக்கொடி. கழக வீரர்கள் 'போர்வாள்' ஆசிரியர் காஞ்சி. மணிமொழியார், கார்ப்பரேஷன் கவுன்சிலர் வி. முனுசாமி, எம். ஆர். பாண்டியன் ஆகியோரையும் மற்றும் பல தோழர்களையும், போலீசார் பிடித்துச் சென்று அடைத்து — பிறகு விடுத்தனர்.

கஷ்டநஷ்டங்களிருந்தாலும் அவைகளைத் துச்சமாக மதித்து கொள்கைக்காகப் போராடிய வீரர்களைப் பெருமிதத்தோடு பாராட்டுகிறோம். வாழ்க அவர்கள் என்று, நமது இதய வாழ்த்துக்களைக் குவிக்கிறோம்!

"நண்பன்?"

[இரா. நாராயணன்]

விலை அணா 6

கிடைக்குமிடம்: ஆர். நாராயணன்

'ஒளி இல்லம்' பேராவூரணி P. O.

(A) தஞ்சை Dt.

திராவிட நாடு

ஞாயிறு] 22—4—51 [காஞ்சி

ஒரு, பேரிடி

✲

தற்போது நடப்பது எதேச்சாதிகார ஆட்சி.

X X X

இதை எப்படியும் ஒழித்துக் கட்ட வேண்டும்.

X X X

காங்கிரஸ் பெயரில் அநீதியே தாண்டவமாடுகிறது.

கூறுவது நாமல்ல; பேராசிரியர் **என். ஜி. ரங்கா** ஆவேசத்துடன் விடுத்திருக்கும் அறிக்கையின் சிறு துளிகள், இவை.

பேராசிரியர் ரங்கா, காங்கிரஸ் இயக்கத்தின் தூண்களில், குறிப்பிடக்கூடியவர். ஆந்திர நாட்டில் காங்கிரஸ் தலைவராகப் பல்லாண்டுகள் பணியாற்றியவர். அவரது போக்கும் செயலும், கருத்து வேறுபாட்டுக் குரியதென்றாலும் பொது வாழ்வுத் துறையில் அவர் ஆற்றியிருக்கும் சேவையை, எவரும் மறுத்துவிட முடியாது. இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு பலகலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர், அவர். சென்னை, பச்சையப்பன் கல்லூரியின் பொருளாதாரப் பேராசிரியராக 1927—30-வரை பதவி வகித்திருக்கிறார். ஆந்திர நாட்டில் காங்கிரஸ் பெருமித செல்வாக்குப் பெற்றமைக்கு, காரணம் என கருதப்படுவோரில் ரங்காவுக்கும் ஒரு சிறப்பிடமுண்டு. பலரால், அதுவும் தென்னாட்டாரால் அடைய முடியாத இடமெனக் கருதப்படும் காங்கிரஸ் காரியக்கமிட்டி உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார். 1934 முதல் அவர் இந்தியசட்டசபையில், உறுப்பினராக இருந்து வருபவர்.

காங்கிரஸ் தலைவர்களில, அகில இந்தியா முழுமையும், புகழோடு விளங்குபவர்களில் என். ஜி. ரங்காவும் ஒருவர். அகில இந்திய கிசான் காங்கிரஸ், அகில இந்திய கைத்தறியாளர் காங்கிரஸ் முதலிய ஸ்தாபனங்களின் தலைவரும் ரங்காதான்.

பொதுவாழ்வில் தீவிரத்தோடு இறங்கிய அவர், விவசாயிகள் நலன் குறித்தும் இந்திய பொருளாதார முன்னேற்றம் சம்பந்தமாகவும பல நூல்களை எழுதியிருக்கிறார்.

இந்தியாவுக்கு மட்டுமின்றி அகில உலக நல்வாழ்வுக்குப் பாடுபடும் ஆசையோடு கூட்டப்பட்ட பல மாநாடுகளிலும் அவர் கலந்து கொண்டிருக்கிறார்—1946-ல் கோபன்ஹேகனில் நடைபெற்ற உணவு விவசாய மாநாட்டிற்கும், 1948-ல் சான்பிரான்ஸிஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன மாநாட்டிற்கும், இந்தியாவின் பிரதிநிதியாக அவர் சென்றுள்ளார். அதுமட்டுமின்றி 1946-ல் லண்டனிலும் 1947-ல் ஹேக்கிலும் நடைபெற்ற சர்வதேச விவசாயப் பொருள் உற்பத்தியாளர்கள் மாநாடுகளில் கலந்து கொள்ளச் சென்ற இந்தியத் தூதுக்குழுவுக்குத் தலைமைதாங்கி நடத்திச் சென்றவரும், இவர்தான். விவசாயத் துறையில, ரங்காவுக்கு, குறிப்பிடத்தக்க புகழும் செல்வாக்கும் உண்டு. 1933-ல் காந்தியாரால் நீடுப்ரோலுவில துவக்கப்பட்ட இந்திய குடியானவர் இன்ஸ்டிடியூட் தலைவராகவும இருந்து வருகிறா

அத்தகைய ஒரு பொதுச் சேவகர், மன ஆவேசத்தோடு, மேற்கண்ட வார்த்தைகளை வெளியிட்டிருக்கிறார் 'அவர் காங்கிரசிலிருக்கிறார்' என்று, பெருமிதத்தோடு ஆந்திரக் காங்கிரஸ் தோழர்கள் கருதியது மட்டுமின்றி, போற்றியும் வந்தனர். உண்மையில், ஓரளவு ஆர்வமும், நாட்டு நலனில் அக்கறையும கொண்டு காங்கிரஸ் இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர் அவர்.

அவர் வெளியிட்டிருக்கிறார். எப்போது? —காங்கிரசைவிட்டு வெளியேறி!

காங்கிரசை கைகழுவி விட்டேன்—என்று, மக்களுக்குத் தெரிவித்து, புதுக் கட்சி துவக்கி, பொது மக்களுக்குப் பாடுபடப் போவதாக வெளியிட்டு, அதற்கு என்ன காரணம் என்று விளக்கும்போது இவ்வளவு மன வேதனையோடு, இத்தகைய வார்த்தைகளைச் சிந்தியிருக்கிறார்.

ரங்கா—காங்கிரசில் உன்னத நிலையிலிருந்தவர். அந்த ஸ்தாபனத்தை விட்டு வெளியேறுவதால், அவருக்கு வேதனையும் சோதனையும் அதிகமாகத்தான் செய்யும்! ஓராண்டு ஈராண்டல்ல பல்லாண்டுகள் ஆந்திர காங்கிரஸ் தலைமைப் பதவி, அவரிடம்தான் இருந்தது அத்தகையவர், இப்போது, முழக்கமிடுகிறார்

"காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை ஒழிப்பதே எனது நோக்கம்" என்பதாக.

காங்கிரஸ் வளர்ச்சிக்காக கஷ்ட நஷ்டங்கள் தாங்கிப் பாடுபட்ட, செல்வாக்குள்ள ஒரு தலைவர் இத்தகைய "ஆவேசம்" கொள்ளுமளவு, காங்கிரஸ் நிலை வந்திருக்கிறது.

"தலைவராகப் போட்டியிட்டார்—தோற்றார்! ஆகவே காங்கிரஸ் மீது காய்கிறார்" என்று, ரங்காவின் ஆவேசத்துக்குக் காரணம் கூறலாம்.

ஆனால், தோற்ற அவர், எத்தனை வோட்டுகளால் தோற்றார் என்பதையும், அவருக்கு காங்கிரஸ் மூலம் அகில இந்தியாவிலும் கிடைத்திருந்தும் செல்வாக்கின் அளவு எவ்வளவு என்பதையும், நாம் கவனிக்கத்தான் வேண்டும்.

அவருக்குக் கிடைத்த வோட்டுகள் 80.

மந்திரியாக இருந்து போட்டியிட்ட சஞ்சீவிரெட்டிக்கு கிடைத்த வோட்டுகள் 85.

ஐந்தே வோட்டுகள்!

அதிலும், இன்னொரு மாவட்டத்திலிருந்து 26 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படாமலேயே, தேர்தல் நடைபெற்றதாம்.

'ஐந்து வெற்றி'தான்! தேர்தலின் முடிவு.

எனவே, அதிக ஆவேசம் காட்டத் தேவையில்லை, ரங்காவுக்கு. ஏனெனில், ஆந்திர காங்கிரஸ் தேர்தலால் மனம உடைந்து போயிருக்கிறார் என்று தெரிந்தால், அவரது மனக் கஷ்டம் போக்க, என்னென்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் நிறைவேற்றித்தர காங்கிரஸ் மேலிடத்தார் காத்துக் கொண்டிருப்பார்கள்.

ஏனெனில் ரங்காவின் தொண்டும் அவரை இழப்பதால் காங்கிரசுக்

கேற்படும் நஷ்டமும் நன்ருகத்தெரியும், காங்கிரஸ் மேலிடத்துக்கு.

அதுமட்டுமல்ல,...காங்கிரசிலிருப்பதால்தான் வகிக்கும் பதவிச்சிறப்புகளும், பெற்றுக்கொண்டிருக்கும் பெருமைகளும், ரங்காவுக்குத் தெரியாததல்ல.

இருந்தும், அவர் "ஆவேசத்தோடு" வெளியேறி, ஆத்திரத்தோடு புதுக்கூடாரம் அமைத்துக்கொண்டிருக்கிருர்.

இதை உற்றுக் கவனிக்கும்போதுதான், காங்கிரசின் உண்மை நிலே, நமது கவனத்துக்கு வருகிறது.

X X X

"காங்கிரஸ் மனம்போன போக்கில் ஆடுகிறது"

"உரிமைகளேயெல்லாம் பறிக்கிறது"

"துற்றஞ்சாட்டி, மனிதனுடைய சுதந்திரத்தையே கொள்ளை கொள்கிறது"

"காங்கிரஸ் காரியக்கமிட்டிமீது நான் வழக்குத்தொடரப் போகிறேன்"

இவ்வளவு துணிச்சலோடு, அறிக்கை விட்டிருக்கிருர், இன்னெரு ஆந்திரத் தலைவர். அவரும் ஒரு ஏனேதானே அல்ல.

காங்கிரசின் பழஞ்சிங்கம் என்று போற்றப்பட்டவர். 'பார்-அட்-லா' பட்டம் பெற்று, டடாடோபமான வாழ்வும், பலர் போற்றும் கவுரவமும் பெற்றுக் கொண்டிருந்தவர். அதை யெல்லாம் ஒத்துழையாமை இயக்கம் தோன்றியபோது உதறித் தள்ளிவிட்டு வெளியேறியவர்! 1926-லேயே சென்னை சட்டசபை உறுப்பினராகி, 1930-ல் வெளியேறியவர்! பல முறைகள் சிறைக்குச் சென்றவர். சென்னை மாகாணத்துப் பிரதமராக இருந்தவர்!

அவர்மீது குற்றங்கள் பல கூறப்பட்டாலும், பிரகாசம் காங்கிரஸ் இயக்கத்துக்காகத் தனது காசுகளே செலவழித்த கதையையும் கஷ்ட நஷ்டத்துக்கு ஆளான வகையையும், காங்கிரஸ் வரலாறு அறிந்தோர் மறுக்க முடியாது.

அத்தகையவர், இப்போது 'காங்கிரஸ் காரியக்கமிட்டிமீது வழக்குத் தொடரப் போவதாக" அறிவிக்கிருர்.

பிரகாசத்துக்கும் காங்கிரஸ் மேலிடத்துக்கும், நீண்ட காலமாகவே தகராறு இருந்து வருவது உண்மைதான்.

அவர்மீது, நடவடிக்கை யெடுக்கும் நிலேயில் காங்கிரஸ் மேலிடமும் சென்னை சட்ட சபைக் கட்சியும், இருப்பது தெரிந்ததுதான்.

ஆயினும், அவர் 'வழக்குத்தொடரப் போகிறேன்—நீதி மன்றத்தில்' என்று, அறிவித்திருப்பதைக் காணும்போதுதான் 'காங்கிரஸின் காட்சி' நம் கவனத்திலும் கண்ணிலும் படுகிறது!

ஆந்திராவின், தூண்கள் இரண்டு, காங்கிரஸ் மாளிகையிலிருந்து நழுவிவிட்டன.

ரங்காவும்—பிரகாசமும் சேர்ந்து 'பிரஜா கட்சி' அமைத்து விட்டதாகவும், அறிக்கைகள் சொல்கின்றன.

ரங்கா—காங்கிரசின் எதேச்சாதிகாரத்தை ஒழிப்பதே, தமது நோக்கமெனக் கூறுகிருர்.

பிரகாசம் – நீதிமன்றம் சென்று காங்கிரசில் நடைபெறும் அநீதியைக் காட்டப் போவதாக அறிவிக்கிருர்.

இருவரும் சாமான்யரல்ல! அவர்கள், காங்கிரஸ் கோட்டைக்காகச் சிந்திய வியர்வையும், இரத்தமும் கொஞ்சமல்ல! இருந்தும், ஆவேசம்! ஆத்திரம்!! பிரிந்துவிட்டனர்!!!

இந்தக் காட்சி, காங்கிரசின் இன்றைய நிலேயைக் காட்டுகிறது, தெளிவாக.

"பிரிந்தார்கள் ஆமாம்! அதிலென்ன உனக்கு சந்தோஷம். அவர்களின் போக்கும் நடவடிக்கையும், பிரிந்ததால் மாறிவிடப் போகிறதா?" என்று கேட்கலாம்.

உண்மைதான் — நியாயமான கேள்விதான்.

நாம், இந்த நிகழ்ச்சியிலிருந்து குறிப்பிட விரும்புவது, எத்தகைய கோட்டை, எவ்வளவு கேவலமாகி வருகிறது என்பதைத்தான்.

ரங்கா — பிரகாசம், காங்கிரசை விட்டு வெளியேறிய சம்பவம் சாதாரணமானதல்ல. காங்கிரஸ் இயக்கத்துமீது விழுந்த ஒரு பேரிடியாகும்!

வளர்த்தவர்களே, ஒழித்துக் கட்டுகிறோம் என்று, முழக்கமிடுகின்றனர்.

பரிதாபமான காட்சிதான்! என் செய்வது? நேர்மையின்மையும் சூதுப் போக்கும் சுரண்டல் ஆசையும் கொண்டோர், எப்போதும், சுகமாகவா வாழ்வர்?

நமது ஆழ்ந்த அனுதாபத்தை, இடிந்துவரும் கோட்டையினருக்குச் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

ஒரு, பேரிடிதான். பரிதாபமானதுதான். ஆயினும், என்றாவது இந்தக் கதி ஏற்படத்தானே செய்யும்! —

பொன்னி

பாரதிதாசன் மணிவிழா மலர்

29-4-51 அன்று வெளிவருகிறது.

புரட்சிக்கவிஞரின் மூவண்ணப்படம் மலரை அலங்கரிக்கிறது.

கட்டுரைகள் - கருத்துரைகள்
கதைகள் - அரிய கவிதைகள்

விலே அணு 8

'பொன்னி' 20—4—51 இதழ் எங்கும் விற்பனையாகிறது.

தோழர் தென்னரசு செழியன் 'மன்றம் அச்சக' உதவி நிதி

அண்ணுதுரையும் இயக்கத் தோழர்களும்

நடிக்கும்

நீதிதேவன் மயக்கம்

கோவையில்

13—5—51 ஞாயிறு

இரவு

கட்டணம்:— ரூ 10, 5, 3, 2.

பெண்கள் ரூ 1.

கோவை நகர தி. மு. க.

புரட்சிக் கவிஞர் மணி விழா

★

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் 60-வது ஆண்டு நிறைவு விழா, ஏப்ரல் 20 முதல் 29 வரை கொண்டாடப்படப் போகிறது.

மனங் குளிர்விக்கும் மேற்படி மணி விழா திருச்சி தேவர் மன்றத்தில் வெகு விமரிசையோடு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

தமிழ் வானில், தனக்கு நிகரின்றி ஒளி வீசும் புரட்சிக் கவிஞரின் மணி விழா, எல்லோர் இதயத்திலும் பூரிப்பைத் தரும். மணி விழாக் கமிட்டியார், மேற்படி மகிழ்ச்சித் திருநாளைக் கொண்டாட பின்வரும் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

20—4—51 காலை 8 மணிக்கு குளிக்கரை பிச்சையப்பா, அபிராம சுந்தரம் நாதசுர விருந்து. மாலை 6 மணிக்கு எம். கே. தியாகராஜ பாகவதர் இன்னிசை. இரவு 9-க்கு திருவாவாடுதுறை டி. என் ராஜரத்னம் நாதசுர விருந்து.

21—4—51 காலையில் நாதசுரம். மாலையில் எண்கண் இராசலட்சுமி நடனம். இரவு எம். எப். மாரியப்பா குழுவின் 'தூக்குத் தூக்கி.'

22—4—51 ஞாயிறு காலையில் டி. என். ஆர். நடராசசுந்தரம் (கக்காயி) நாதசுரம். மாலையில் குமாரி ராஜம் இன்னிசை. இரவு, நடிக நட்சத்திரம் கே. ஆர். ராமசாமி குழுவின் 'மனோகரா'

23—4—51 காலை நாதசுர விருந்து. மாலையில் கே. பி. சுந்தராம்பாள் இன்னிசை. இரவு திருவெண்காடு சுப்ரமண்யம் நாதசுரம்.

24—4—51 காலை நாதசுரம். மாலை மதுரை சோமு or எம். எம். தண்டபாணி (தேசிகர்) இன்னிசை. இரவு 'கட்டபொம்மு' நாடகம் 'போலி பூசாரி' நகைச்சுவை நிகழ்ச்சி.

25—4—51 காலை நாதசுரம். மாலை யு. ஆர். ஜீவரத்தினம் இன்னிசை.

26—4—51 காலை நாதசுரம். மாலை சிதம்பரம் ஜயராமன் இன்னிசை. இரவு எம். ஆர். ராதாவின் 'இரத்தக் கண்ணீர்'

27—4—51 காலை நாதசுரம். மாலை சென்னை கஸ்தூரிபாய் இசை. இரவு, சி. என். ஏ., கே. ஆர். ராமசாமி, சம்பத் நடிக்கும் 'சிவாஜி'.

28—4—51 காலை நாதசுரம். மாலை எம். கே. கோவிந்தராஜ பாகவதர் இன்னிசை. இரவு எஸ். வி. சகஸ்ரநாமம், என். எஸ். கே. குழுவினரின் 'இழந்த காதல்.'

29—4—51 காலை டி. என். ராஜரத்தினம் நாதசுரம். பிறகு சி. என். ஏ. பேச்சு. மாலையில் என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், எதார்த்தம் பொன்னுசாமி, ஆள்வார், புளிமூட்டை, பாண்டியன், ராதாகிருஷ்ணன் ஆகியோரின் 'புலமை புரட்சி'.

கவியரசர் மணிவிழாவை சிறப்பிக்க, எதார்த்தம் பொன்னுச்சாமி இத்தகைய சிறந்த கலைவிழாக்களை ஏற்பாடு செய்திருக்கிறார்.

இந்த மகிழ்ச்சி வெள்ளத்தில் நாமும் கலந்து கவிஞரைப் போற்றுவோம்!

வ. ஆ. மாவட்ட செயற்குழு கூட்டம்

8—4—51-ல் குடியேற்றத்தில் நடந்த வடார்க்காடு மாவட்ட தி. மு. க. செயற்குழு கூட்டத்தில் மாவட்டத்தில் 'ஆரியமாயை' நூல் படித்த தோழர்களை பாராட்டியும் கண்ணமங்கலம் தோழர் கே. எல். முனுப்மீது தொடுத்துள்ள வழக்கு அவசியமேற்பட்டால், எடுத்து நடத்தவும், அதன் செலவிற்கு, கிளைக் கழகம் ஒவ்வொன்றும் ரூ. 5 வீதம் தரவேண்டுமெனவும், ஜூன் மாதம் கடைசி வாரத்தில் திருப்பத்தூரில் எழுத்துரிமை, பேச்சுரிமை மாநாடு நடத்துவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் பல தீர்மானங்களும் விவாதிக்கப்பட்டு, முடிவு செய்யப்பட்டன என்று செயலாளர் போளூர். சுப்ரமணியம் தெரிவிக்கிறார்.

நல்ல பாடம்!

சர்வாதிகாரச் சதிராடிய மெக் ஆர்தர், அமெரிக்கத் தலைவர் ட்ரூமனின் உத்திரவால், திருப்பிவிட்டார் அமெரிக்காவுக்கு.

மெக் ஆர்தர், ஜப்பானைத் தனது சொந்த பூமியென நினைத்து ஆடிய வெறிக்கூத்துக்களை மக்கள் அறிவர்.

அத்தகைய ஒரு நபரை, கட்டாய உத்திரவு பிறப்பித்து பணபிம்பத் தலைவரான ட்ரூமன், வேலையினின்றும் விலக்கியிருக்கிறார்.

பணாதிபத்தியத்துக்குள்ள சிறந்த தளகர்த்தர்களில் ஒருவர் என்று, பணந்தாங்கிகளால் கருதப்படும் பெருமை பெற்ற பெரிய ஆசாமி மெக் ஆர்தர்.

மெக் ஆர்தரை, பதவி பீடத்திலிருந்து இறக்கியதற்குக் காரணம், அமெரிக்கத் தலைவரின் கட்டளைகளை மீறியது என்று காட்டப்பட்டிருக்கிறது. அதோடு கொரியாவில் அமெரிக்கச்சார்பிலும், ஐக்கிய நாடுகள் சார்பிலும் போரை நடத்தும் பொறுப்புகொண்ட அவர், அடிக்கடி அரசியல் அறிக்கைகள் விடுத்தாரென்பதும், அது இராணுவ தளகர்த்தருக்கு அழகல்லவென்றும் கூறப்படுகிறது. முக்கிய குற்றச்சாட்டாகக் கூறப்படுவது, மெக் ஆர்தர் சீனவுக்கு எச்சரிக்கைவிடுத்தாரென்பதும்—அதுநல்லெண்ணத்தைச்சீர்குலைக்கும் கேட்டைச்சிருஷ்டிக்குமாதலால், அது அவர் அதிகாரத்துக்கு மேற்பட்ட காரியமாகும் என்பதாகும்,

ஆவேசத் திமிருடன் விபரீத 'டேயாட்டம்' நடாத்திய, அந்தபெரிய ஆசாமி, பதவி நாற்காலியிலிருந்து, அதிருப்தியால் அகற்றப்பட்டுவிட்டார்.

திமிர்கொண்டோருக்கு ஏற்படுவது திடீர் ஞானோதயமாக இருந்தாலும், அது நிலைக்கவேண்டுமென்றே, நாம் ஆசைப்படுகிறோம்.

மெக்-ஆர்தர் 'டிஸ்மிஸ்'—எவ்வளவு பெரிய ஆசாமியாக இருந்தாலும், முறைகெட்டு, வழிதவறி நடந்தால், வீழ்ச்சிதான் பரிசாகக் கிடைக்கும் என்பதைக் காட்டுகிறது.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மூட வேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள் — மூடமுடியவில்லை—இதற்குமுன்னால் — இனியுந்தான்!

அப்படியே அவர்கள் காங்கிரஸ்காரர்கள் வாயை மூடிவிட்டார்கள் என்றால் மட்டும், நாடு வாய் மூடிக் கொள்ளுமா?

* * *

ஆந்திரக் காங்கிரஸ் மகாசபைத் தலைவர் தேர்தல் நடந்தது—இந்தக் காட்சியைக் காங்கிரஸ்காரர்கள் கூற வில்லை — வாய்மூடிக்கொண்டார்கள் என்றே வைத்துக்கொள்வோம். மக்கள் மனதிற்கு இது வந்துசேராதே போய்விடுமா?

ஆந்திர மக்கள் கண்களையும் மூடிவிடுவார்களோ! அறியோம்.

சஞ்சீவியாரைத் தெரிந்தெடுத்தார், சுனம் கோபாலர் பேசியதை, பு கூடியிருந்தோர் கேட்கத்தான் செய்தனர். அதுபோலவெளியேறிய ரங்கா, பிரகாசம் ஆகியோரின் பேச்சையும் அவர்களே கேட்டனர். நல்லவேளை, அவர்களின் செவிகளை மூடத் தீர்மானம் போடவில்லை!

மக்களை இங்குமங்கும் விரட்டியபடி, போலீஸ் காவல் இருந்தது.

துப்பாக்கிகள்
யாரிடம்?
காங்கிரஸ் சேவாதளத்தாரிடம்
எப்பொழுது?
தலைவர் தேர்தல்போது
எப்படித் தெரிந்தது?
போலீஸ் கண்டு பிடித்தது
ஏன்?
யாருக்குத் தெரியும்!

ஆந்திரக் காங்கிரஸ் தலைவர் தேர்தல் நடப்பதற்கு முன்னால், அஹிம்சா மூர்த்தியின்வழிவந்தோர் அமைத்த சேவாதளத்தைச் சேர்ந்த நால்வர், வெடிக்கத் தயாராக்கப்பட்ட துப்பாக்கிகளு—டனிருந்ததைப் போலீசார் கண்டனர். கைப்பற்றினர். இந்தச் செய்தி, அங்கு கூடியிருந்தோர் செவிகளில் வந்து தாக்கியபடியிருந்தது. அவர்களின் செவிகளை மூட, காங்கிரஸ் கமிட்டி திட்டம் போடவில்லை.

போட்டி, பொறாமை, பதவி வெறி, பேராசை, லஞ்சம், ஊழல் — எல்லாம் நிறைந்துவிட்ட ஒரு கட்சியில் இனி வாயை மூடுவதால் மட்டும் காரியமாகி விடுமா? மக்களின் கண்களை, செவியை யார் மூடுவார்கள்?

* * *

வாயை மூடத் தீர்மானம் போடுகிறார்கள், ஆனால் வாயை மூடாதது மட்டுமல்ல, கட்சியைப் பிளந்து கொண்டே, கட்சியமைக்கிறார்கள்.

ஆந்திரத் தேர்தல், அகில இந்தியாவிற்கும் காங்கிரஸின் இன்றைய நிலையை விளக்கும் ஒரு படம்!

ரங்காவும், பிரகாசமும் காங்கிரசை விட்டே வெளியேறி விட்டார்கள். பட்டியல் வந்து, வாயை மூடிட, தேர்தல் நடத்தினர். ஆனால், வாயைத் திறந்துகொண்டு கிளம்பி விட்டனர், ஒரு பகுதியினர்!

மூடப் பார்த்தார்கள் — எதிர்க் கட்சியே கிளம்பிவிட்டது.

வாயை மூடிக்கொள்ளவில்லை — புதிய கட்சியே முளைத்து விட்டது!

பிரஜா கட்சியென்ற பெயரால் புதிய கட்சி தோற்றுவிக்க முடிவு செய்யப்பட்டு விட்டது!

நெருப்பைத் துணியால் மூடினார்கள்—துணியே எரிந்துவிட்டது!

பிரகாசம் தலைமை வகித்து நடத்தும் ஜனநாயக முன்னணியும், ரங்கா தலைமையில் நடக்கும் கிஸான் மஸ்தூர் கட்சியும் இணைந்தே, இந்த புதிய கட்சி அமையும் என்று அறிவித்து விட்டார்கள்.

கிருபளானி, வாய் மூடும் வைபவம் நடத்தும் தீர்மானத்தைக் கண்டித்தார் பலமாக—அதன் விளைவு எப்படியாகும் என்பதை ரங்கா, பிரகாசம் காட்டிவிட்டனர் விளக்கமாக—காங்கிரசின் கதியை, புதிதாக முளைத்த கட்சி சொல்லும், கதை கதையாக!

காங்கிரசுக்குள்கட்டுப்பாடு வேண்டும் என்றால் எப்படி வரும்? கஜ கலந்துப்போன கட்டிடத்தில் உறுதியான அமைப்பு எப்படி இருக்கும் அங்கே, ஆளுக்கு ஆள் போட்டி, வெவ்வேறு அபிப்பிராயம் — அதனால் பகை, பேதம், பிளவு! ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை எதிர்பார்த்து ஏமாறுகிறார்கள் — ஆத்திரம் கோபம், எரிச்சல் எல்லாம்! இத்தனையும் தீர்மானத்தால் மூடுகிறார்கள், மூடிவிட்டால் முடிந்து விடுமா?

உடம்பு முழுவதும், குஷ்டம்—பட்டாடையுடுத்தி பவனி வந்துவிட்டால் மட்டும் மக்கள் பாராட்டி விடுவார்களா? குஷ்டரோகத்தை மறைக்க, இந்த 'குபேர புரி' ஆடைகளால் உடலை மூடுகிறான் என்று தானே பேசுவார்கள்.

அழுகலை வைத்துக்கொண்டு, பழ வியாபாரம் செய்யும் பரமசிவம், பங்குதார கங்காதரனிடம் பேசுவதைக்கேட்ட, வாடிக்கைக்கார பராங்குசம் வேறு கடை தேடுவதைப் போலத்தானே மக்கள் நடந்து கொள்வார்கள்!

வெள்ளத்திலே சிக்கியவன், ஒரு துரும்பைக் கண்டாலும், அதனைத் தெப்பமாக்கித் தப்பிவிடலாம் என்று எண்ணுவான்— அப்படித்தான் காங்கிரசின் 'வாய் மூடு' தீர்மானம்!

வாயை மூடுகிறார்கள் — ஆனால் கண்களை, செவியை யார் மூடுவார்கள்? ஆட்சியிலே உள்ளவர்கள் கட்சியிலே உள்ளவர்கள் மட்டுமல்ல நாட்டிலிருப்போர்—மக்கள் சமுதாயம் பார்த்தது— சிரித்தது!

அவர்கள் மூடுகிறார்கள், விபரந் தெரியாமல்—அதனைக் கேலிச் சிரிப்புடன் மக்கள் பார்க்கிறார்கள், திறந்த கண்களோடு, தெளிந்த சிந்தனையோடு!

வருந்துகிறோம்

தோழர் கே. கே. நீலமேகம் அவர்களின் கடைசி மகன், பதினொரு வயதும் நிரம்பாத இளஞ்சிறுவன், செல்வன் 11—4—51 ல் மோட்டார் விபத்திற்காளாகி, இயற்கையெய்திய செய்தி கேட்டு, திடுக்கிட்டோம்—பெரிதும் வருந்துகின்றோம். பிரிவால் வாடும், தோழருக்கும், அவர் தம் குடும்பத்தாருக்கும் நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசியல், பொருளியல், கலையியல் பற்றிய ருசிகர பகுதிகளைத் தாங்கி வெளிவரும் ஏடு,

நம் நாடு

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:—

(A) 'நம் நாடு' நிலையம், திருச்சி.

"பொறுப்பில்லாத்தனம்"

குமாரசாமியார் கண்டுபிடிப்பு!

திருச்செங்கோட்டுக்கருகிலே, நமது சென்னை முதலமைச்சர், தமது திருவாய் திறந்து, சில சொல்லியிருக்கிறார்.

நமக்கல்ல; பொதுமக்களுக்கு! அவர் பிரசங்கத்தில் அடிக்கடி 'பொது ஜனங்களே! பொது ஜனங்களே!' என்று, அழைத்தவண்ணமே பேசினாராம்.

அதுபோது, 'பொதுஜனங்களே, நடப்பு வருஷத்தில் ரூ 25 கோடி கடன் தேவையாக இருக்கிறது— பல அபிவிருத்தித் திட்டங்களை அமுல் நடத்த' என்று, கூறினாராம். அதோடு, 'பொது ஜனங்களே, அந்தக் கடனையும் நீங்கள்தான் ஒத்துழைப்போடு தரவேண்டும்' என்றும், கேட்டுக்கொண்டாராம்.

பொது ஜனங்களுக்கு இப்பொன்மொழிகளைச் சொல்லவா, போனார்- சென்னை மாளிகை விட்டு, என்று கேட்காதீர்கள்.

ஏனென்றால், இன்னுஞ் சில அவருடைய திருவாயிலிருந்து திருச்செங்கோட்டு பொது ஜனங்களுக்கு கிடைத்திருக்கிறது.

"புது அபிவிருத்திகளைச் செய்யப் போகிறோம் — தேவை 25 கோடி. கடன் கொடுங்கள்" என்று, கூறியதோடு, அவர் பேச்சை முடித்துக் கொள்ளவில்லை.

நூலில்லை! வயிற்றிலே குடல் இல்லை! உடலிலே உயிர் இல்லை! பசித்தால் புசிக்கக் கிடைப்பது புளியங்கொட்டை!—என்று, முகாரி பாடிக் கிடக்கும் "பொது ஜனங்கள்" முன், கடன் கேட்டதோடு, நமது முதலமைச்சரின் துணிவு நின்றுவிடவில்லை.

"தேர்தலில் பொது ஜனங்கள் காங்கிரசுக்கே வாக்கு தரவேண்டும்" என்றும் கேட்டிருக்கிறார்.

துணிச்சல், அதிகம்தான், நமது முதலமைச்சருக்கு!

திண்டாடி 'நூல் வேண்டுமென' மறியல் செய்த மக்களிடையே போய் கடன் பெற ஒத்துழைப்பும், காங்கிரசை ஆதரித்து வாக்களிக்கவும் கேட்டதோடு இருந்துவிடவில்லை.

எச்சரிக்கையும் விடுத்திருக்கிறார், "பொது ஜனங்களே, எதிர்க் கட்சிகள் பொறுப்பில்லாமல் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன. அவைகளின் அபிப்பிராயங்களுக்கு செவி சாய்க்காதீர்கள்" என்றும், தெரிவித்திருக்கிறார்.

எதிர்க் கட்சிகள் மேலும் முதலமைச்சர் பாய்வானேன் என்று, சிறிது ஐயம் ஏற்பட்டது எனக்கு.

பிறகு, புரிந்தது! அவரோடு சேர்ந்துமுனை சிந்துநடைத், 'தலை' ஒன்றும் இருந்திருக்கிறது. இருந்ததுமட்டுமல்ல, முதலமைச்சர் கலந்துகொண்ட திருச்செங்கோடு தாலூகா காங்கிரஸ் 6-வது மாநாட்டிற்குத் தலைமை தாங்கியதும் அந்த 'நபர்'தான்! தலைமை நாற்காலியின் வாடைபோலும்!

பொறுப்பில்லாமல் அபிப்பிராயம் கூறுகின்றனராம் எதிர்க்கட்சியினர்.

கூறுகிறார் — முதலமைச்சராக, பதவியில் இருக்கும், குமாரசாமி ராஜா.

பொறுப்பு, அவரிடம் இருப்பதால் இப்படிக்கூறினார் என்றல்ல பொருள்—அவர், அப்படிக் கூறிய தற்கு.

பொறுப்பு—தன்னிடம், இருப்பதாகக் காட்டிக் கொண்டிருக்கிறார், தனதுசகாக்கள் மத்தியில், மகிழ்ச்சி! அதாவது, இருப்பதாக எண்ணுமளவு, மறதி நமது முதலமைச்சருக்கு இல்லையென்பதால்.

பொறுப்புள்ள 'புண்யநாட்டின்' புத்திரருக்கு, சில காட்சிகள் இதோ.

X X X

சென்ற ஆண்டைவிட இப்போது ரயில் கட்டணம் உயர்ந்திருக்கிறது, ஆனால் ரயிலில் வசதிகள் அதிகமாகவில்லை!

அதுமட்டுமல்ல; அந்த ரயில்வே நிர்வாகத்தைப் பார்த்தால், கண் இருளுகிறது! கண்ணீர் திரளுகிறது.!

ரயில்வே மந்திரி } 'அவர்கள்
அவரது உதவிமந்திரி } மயம்!'

அதுமட்டுமல்ல, 'மருமகன், சம்பந்தி, மைத்துனர்' அங்கே உலவுவதற்கான 'ஏற்பாடுகள்' பிரமாத முஸ்தீபுடன் செய்யப்பட்டு வருகின்றன!

'அவர்கள்' வீட்டுப் 'பையன் நமக்கு அட்வகேட் ஜெனரல்!

தென்றல் அங்கு; புயல் இங்கு;
இதை நாம் காட்டுகிறோம் —
இது பொறுப்பற்றதாம்!

தபால் கட்டணத்தை உயர்த்திவிட்டார்கள் இப்போது. மணியார்டர், ரிஜிஸ்டர் முதலிய கட்டண விகிதங்களை அதிகமாக்கியிருக்கிறார்கள். முன்பு, மணியார்டர் கட்டணம் பத்து ரூபாய்வரை இரண்டணா — அதற்குமேல் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும், மேற்கொண்டு இரண்டணா.

ஆனால், வரும் மே முதல்:—

5 ரூ வரை இரண்டணா.
10 ரூ வரை மூன்றணா
15 ரூ வரை நான்கணா.
25 ரூ வரை ஆறணா.

இதேபோல ரிஜிஸ்டர் கட்டணமும் நாலணாவிலிருந்து $4\frac{1}{2}$ அணா ஆக்கப் போகிறது; மே முதல், வி. பி. இன்ஷூரன்ஸ் கட்டண விகிதங்களும் அதிகமாகுமாம்.

உள்ளூர் தபால்கள், கார்டுகள் அரை அணா, கவர் 1 அணா என்பது இனி கிடையாதாம்!

—சுமை, அதிகமாகிறது பொது மக்களுக்கு.

இதை, எதிர்க்கட்சி, சொல்வது பொறுப்பற்றதாம்!

உணவு தானியங்கள், போதிய அளவில் கிடைக்கவில்லை ஏழைகளுக்கு! கிடைத்தாலும், தேவைக்கான அளவில் வாங்க முடியவில்லை! விலைவாசிகள், உயர்ந்து போய்விட்டன. தொழிலாளி அழுகிறான். கிடைக்கும் கூலி போதவில்லையே என்று பெருமூச்சு விடுகிறான். குழந்தைகள் பட்டினி, மனைவி கதறுகிறாள் — வேதனையான காட்சிகள், நாடு முழுமையும்! இந்த காட்சியின்

..காரம், தெரியாதவர்களல்ல காங்கிரஸ் மந்திரிகள். 'விலைவாசி குறைய வேண்டும்' என்று, பேசித் திரியாமலும் இல்லை. ஆனால், சமீபத்தில் உணவுத் தானியங்களின் விலையை 8% அதிகமாக்கி விற்க அனுமதி தந்துவிட்டது இந்திய சர்க்கார்.

உணவுப் பொருள், வாழ்க்கைக்குத் தேவையானது. அதைப் பெறவோ போதுமான கூலியில்லை, பொதுமக்களுக்கு! ஆனால், அரசாங்கமோ, மக்களுக்குத் தேவையான பொருள்களின் விலையை அதிகமாக்குகிறது! பண் மூட்டைகளின் பணப்பை கொழுக்கிறது, கள்ள மார்க்கெட் கொள்ளை பெருக வசதி செய்து தருகிறது!

—இது நியாயமா? இதைக் கேட்பதா, பொறுப்பற்றதனம்?

வாழப் பிறந்த மனிதனுக்கு உணவுக்கு அடுத்தபடி தேவையானது உடை. ஆனால் இந்த அடிப்படை தேவைகள்கூட கிடைப்பதில்லை, "இந்த ஆட்சியில்! ஆடைகள் கிடைப்பதில்லை—கிடைத்தால், அவைகளை வாங்கக்கூடிய அளவு பணமில்லை!" ஆடைகளின் விலைவாசிகள், முன்பே, கோரமாக உயர்ந்துவிட்டன! அதைக் காட்டி, மக்கள், "விலையைக் குறை" என்று சர்க்காரைக் கோரினர். மக்கள் கோரிக்கை மண்ணில்! ஆனால், மக்களைச் சுரண்டிக் கொழுக்கும், ஆலையரசர்களின் மிரட்டல் கண்டு பணிகிறது சர்க்கார்! 'விலை குறைவு—அதிகரிக்க வேண்டும்' என்று தாக்கீது அனுப்பினர் சர்க்காருக்கு. அண்மையில் இந்திய சர்க்கார் உத்திரவு பிறப்பித்து விட்டது.

ஆடைகளின் தரத்துக்குத் தக்கபடி, 3% லிருந்து 35% வரை, விலைகளை அதிகமாக்கும்படி. ஏழை, மடிகிறான்! எத்தன் கொழுக்கிறான்!!

—இதுவா, நேர்மை? இதைக் கேட்பதா, பொறுப்பின்மை!

x x x

முதலமைச்சர், எதிர்க் கட்சிகளின் பொறுப்பற்ற தன்மை பற்றி பொதுஜனங்களை எச்சரித்திருக்கிறார்.

"மான் வலையில் சிக்காதீர்" என்று மான் கூட்டத்துக்குப் புலி எச்சரிக்கை தருகிறது.

ஊழல்! பணவிரயம்! புத்தி இல்லை! திறமை, பூஜ்யம்!—என்று, பலவித பட்டங்களைப் பெற்று வரும் காங்கிரஸ் முதலமைச்சர், 'கடன் கேட்டு' பின் 'காட்டுக் கூச்சல்' ஒன்றும் விடுக்கிறார்! வேடிக்கையானது—வேறெங்கு காண முடியும், புண்ய புத்திரர் ஆட்சியிலன்றி!

எச்சரிக்கை விடுப்பது,

இறுமாந்து பேசுவது,

எல்லாம் பழைய காட்டுராஜா. முறை! அதை, பெயருக்குப் பின்னால், வால்போல 'ராஜா'வை, வைத்திருக்கும் இவர் கையாள முயல்கிறார்! பாவம், பதவிக் கனவு பலிக்காதோ என்ற சஞ்சலம் பலப்பல பேசச் சொல்கிறது போலும்!!

★

தஞ்சை மாவட்ட மாநாட்டு வ. குழு கூட்டம்

21—4—51 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மாயவரம் தோழர் பழனிச்சாமி அவர்கள் கடையில் நடைபெறும். அங்கத்தினர்கள் இதையே அழைப்பாகக்கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

V. பராங்குசம்,
R. பழனிச்சாமி,
செயலாளர்கள்.

அரிய முயற்சி!
சீரிய காரியத்துக்காக!

சிதம்பரம் தில்லை தியேட்டரில்

உயரிய கலைநிகழ்ச்சி!
உன்னத பணிக்காக!

29—4—51 ஞாயிறு

இரவு 10 மணிக்கு

சி. என். ஏ.
நடிப்புப்புலவர்
கே. ஆர்.
ராமசாமி
மற்றும் பலர் நடிக்கும்

சி. என். ஏ. தீட்டிய

சந்திரமோகன்

மராட்டிய மண்டலாதிபதி சிவாஜி, மணிமுடி தரிப்பதற்குள் வைதீகம் ஆடிய வெறிக் கூத்தை விவரிக்கும் சரித்திரச் சித்திரம்.

நாடகம் நடைபெறும்

கட்டணம் ரூ. 25, 10, 5, 2, 1.

சேலம் மாவட்ட
தி. மு. க. முதல் மாநாடு

விடுதலை முரசு கொட்ட வாரீர்!
திட்டம் தீட்டிட திரண்டு வாரீர்!!

★

★
மே 5, 6
சனி, ஞாயிறு
நாட்களில்!
★

தலைவர்:
நாகர்கோயில்
வி. எம். ஜான்
★
துவக்குபவர்:
சென்னை
சத்தியவாணிமுத்து

சேலம்
அம்மா
பேட்டை
மெயின்
ரோடு
தியாகராயர்
பந்தலில்!!

★

பொதுச்செயலாளர் அண்ணாதுரையும்
கழக முன்னணி வீரர்களும் கலந்துகொள்வர்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை
கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும்

சந்திரமோகன்	நீதிதேவன் மயக்கம்
[சரிதச் சித்திரம்]	[காவிய ஓவியம்]

வரவேற்புக் குழு அங்கத்தினர்	ரூ. 5	பார்வையாளர்	ரூ. 2
பிரதிநிதி	ரூ. 2	பெண் பார்வையாளர்	ரூ. 1

உணவுக் கட்டணம் தனி

அ. சித்தையன், செயலாளர். ப. கண்ணன் வி. அலுவலர். R. நாராயணசாமி, பொருளாளர். G. P. சோமசுந்தரம், வ. க. தலைவர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.